தமிழ் நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1974 ஏப்ரல் 8.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

Prosperity Brigade Volunteers

* 762 *Q.*—THIRU M. SURENDRAN: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state whether there is any proposal under the consideration of the Government to appoint more number of volunteers of the Prosperity Brigade at important bus stops in the City of Madras to prevent cases of pick pockets?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இல்லை.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, சென்னையிலிருக்கும் சில பஸ் நிலையங்களிலும் சினிமாக் கொட்டகைகளிலும் பிக் பாக்கெட்டுகள் அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவை நடைபெறுவண்ணம் கண்காணிக்கும் வகையில் நமது சீரணிப் படையினரை அங்கே அமர்த்துவது ஓரளவு நலமாக இருக்கும் என்று கருதப்படுகிறது. ஆகவே, அவர்களை அங்கே நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, போலீஸ் அதிகாரி அவர்கள் சி.ஐ.டி.-க்களைப் போட்டு இந்தக் காரியத்தை நிறைவேற்றலாம் என்று தெரிவித்திருப்பதற்கேற்ப, ஏறத்தாழ 100 பேர் சீரணிப் படையினர் பணியாற்றியதற்குப் பதிலாக எழுபது பேர் பணியாற்றி வருகின்றனர்.

Field Publicity Forum.

* 763 *Q.*—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether any communication from the Union Directorate of Field Publicity on the formation of the Citizens Information Forum has been received; and

(*b*) if so, the details thereof?